## <u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

**அசல் வழக்கு எண். 232/2019**

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் நாள் வியாழக்கிழமை என்பவரது சாட்சியாகிய **<u>செல்வேந்திரன் PW.1</u>** இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 21.03.2024

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | செல்வேந்திரன் | | |
| Father Name | : | ரெத்தினசாமி | Court | : |
| Village | : | மேலபெரும்பள்ளம், கரைமேடு | Taluk | : |
| Calling | : | | Religion | : |
| Age | : | 65 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

08.06.1966 ஆம் தேதியிட்ட தாவா 1 ஐட்ட சொத்தைப் பொறுத்து பிரதிவாதிகளின் தகப்பனார் பெயரில் ஏற்பட்ட கிரய சாசனத்தின் அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா 4 வது ஐட்ட சொத்திற்கு வாதியின் தகப்பனார் ரெத்தினசாமி பெயரில் உள்ள பட்டாவின் அசல் **வா.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 19.05.1969 தேதியிட்ட 2 வது ஐட்ட சொத்தை பிரதிவாதிகளின் தகப்பனார் ராமு படையாச்சி கிரயம் பெற்ற கிரயசாசனத்தின் அசல் **வா.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.05.1969 தேதியிட்ட 3 வது ஐட்ட சொத்தை ராமு படையாச்சி கிரயம் பெற்ற கிரயசாசனத்தின் அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

21.02.1989 முதல் 29.03.2008 வரை தேதிகளில் தாவா சொத்துகளுக்கு செலுத்தப்பட்ட வாய்தா ரசீது 7 (எண்ணிக்கை) அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 29.05.1993 தேதியில் வாதி பெயரில் கரும்பு ஆலையில் கொடுத்த விருப்ப கடிதத்தின் அசல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.12.2004 தேதியில் வாதி தாசில்ராருக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதி நாகப்பட்டினம் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகாரின் அலுவலக நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 343/2004 பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையில் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 343/2004 பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மயிலாடுதுறை கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண் 2/2009 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மயிலாடுதுறை கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண் 2/2009 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.